


**23. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. சுதந்திர இந்தியாவின் முதல் Governor General சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியின் திருவுருவச் சிலையை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று திறந்து வைத்தார்.

2. தூத்துக்குடி துறைமுகத்தில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் இன்று அடிக்கல் நாட்டினார்.

3. சுரங்கப் பகுதிகளின் சுற்றுச்சூழலை மீட்டெடுத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் அவசியத்தை மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன்ரெட்டி வலியுறுத்தியுள்ளார்.

4. இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தினார்.

5. தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியலை மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் இன்று பிற்பகல் வெளியிடுகிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

சுதந்திர இந்தியாவின் முதல் Governor General சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியின் திருவுருவச் சிலையை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று திறந்து வைத்தார்.

காலனி ஆதிக்க மனப்பாங்கை களைந்து நாட்டின் கலாச்சாரம், பாரம்பரியம், மரபுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் நாட்டிற்காக அளப்பரிய சேவையாற்றியவர்களை கவுரவிக்கும் வகையில் இந்நடவடிக்கை என்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன், தமிழக மக்களின் சார்பில் குடியரசு தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

நாட்டின் விடுதலைக்கு ராஜாஜி ஆற்றிய அளப்பறிய சேவையை நினைவு கூறும் வகையில் சிறப்பு கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

சர்பானந்த சோனோவால்

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் இன்று அடிக்கல் நாட்டினர்.

வ.உ.சி. கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம், 8 மெகாவாட் திறன்கொண்ட காற்றாலை, 5 மெகாவாட், மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு, பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

துறைமுகத்தின் மேம்பாட்டிற்காக 26 கோடி ரூபாய் மதிப்பில் மெய்நிகர் மாதிரி செயலியையும் அறிமுகம் செய்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிஷண் ரெட்டி

சுரங்கப் பகுதிகளின் சுற்றுச்சூழலை மீட்டெடுத்து புதிய வாழ்வாதாரம் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களையும் தொடங்குவதற்கான நடவடிக்கைகளின் அவசியத்தை மத்திய சுரங்கம் நிலக்கரி துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி வலியுறுத்தியுள்ளார்.

கடலூரில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் சார்பிலான சுரங்க மறுபயன்பாடு தேசிய பயிலரங்கை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், இதற்கு முறையான திட்டமிடலின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

வேளாண் காடுகள், விவசாயம், மீன் வளர்ப்பு, சுற்றுச்சூழல் பூங்காக்கள், காற்றாலைகள், சூரிய சக்தி ஆலைகள், தரவு மையங்கள், பால்பண்ணைகள், விளையாட்டு அரங்குகள், தளவாட தொழிற்சாலைகள் போன்றவற்றை சுரங்கப் பகுதிகளில் அமைப்பது குறித்து நாம் ஆலோசிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன அதிகாரிகள் இத்தகைய நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளதாகவும், சரியான நேரத்தில் உரிய பயிலரங்கம் நடத்தப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சுரகங்கள் மூடப்படும்போது, சமூகம் மற்றும் இயற்கைக்கும் ஏற்ற அறிவியல் ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

நாட்டில் தற்போதுள்ள நிலக்கரி சுரங்கங்களில், 478 செயல்பாட்டில் உள்ளதாகவும், 147 சுரங்கங்கள் மூடப்பட்டு இருப்பதாகவும் எடுத்துரைத்த அமைச்சர், மூடப்பட்ட சுரங்கங்களின் மறுபயன்பாட்டை நோக்கமாக கொண்டே இந்த பயிலரங்கு நடைபெறுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு ஒருகோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையில் பால் விநியோகம் செய்யும் மகளிரின் பட்டியலை கூட்டுறவு துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் பாரத் டாக்ஸி ஓட்டுநர்கள் இடையே இன்று உரையாற்றிய அமைச்சர், ஆண்டொன்றுக்கு ஒருகோடி ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டும் கால்நடை வளர்க்கும் பெண் விவசாயிகளின் புகைப்படங்கள் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்றார்.

பாரத் டாக்ஸி திட்டம் ஓட்டுநர்களுக்கு ஆளுமை வழங்குவதோடு அவர்களின் பணிக்கான உரிமமும் உறுதிசெய்யப்படுவதாக கூறினார்

தனியார் டாக்ஸி சேவை மூலம் குறிப்பிட்ட நிறுவனங்களே பயனடைவதாகவும், ஆனால் பாரத் டாக்ஸியின் லாபம் ஓட்டுனர்களை சென்றடைவதாகவும் எடுத்துரைத்தார்.

ஓட்டுனர்களின் நலனையும், பயணிகளின் பாதுகாப்பையும் ஒருசேர உறுதி செய்யும் வகையில் பாரத் டாக்ஸி செயல்படுவதாக திரு. அமித்ஷா குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

உலகளவில் செயல்படும் மத்திய வங்கிகள் தங்கத்தை அதிகளவில் வாங்குவதாலேயே அதன் விலை தொடர்ந்து உயர்வதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மும்பையில் ரிசர்வ் வங்கியின் மத்திய வாரிய கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், தங்கம், வெள்ளி இறக்குமதி அச்சுறுத்தும் வகையில் இல்லை என்றும் தொடர்ந்து அது கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் எடுத்துரைத்தார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு தாக்கம் குறித்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், வர்த்தக அமைச்சகம் இதனை ஆய்வு செய்வதாகவும் கூறினார்.

அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைகளை தொடங்குவது குறித்து உயர்நிலை பிரதிநிதிகள் முடிவு மேற்கொள்வார்கள் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் கடிதம்

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு இன்று அவர் எழுதியுள்ள கடிதத்தில் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், தடுப்பு காவலில் வைக்கப்படுவதும் கவலையளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனிடையே எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி தனுஷ்கோடி அருகே தலைமன்னாரில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பாம்பன் பகுதியை சேர்ந்த 12 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து எமது ராமேஸ்வரம் செய்தியாளர்

.. வாய்ஸ்..

❖❖❖❖❖❖❖❖❖❖

இறுதி வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியலை மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் இன்று பிற்பகல் வெளியிடுகிறார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் வாக்காளர் பட்டியலை இன்று வெளியிட்டனர்.

இதன்படி திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 21 லட்சத்து 26 ஆயிரத்து 303 பேர் இறுதி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சரவணன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

வேலூரில் மொத்தம்11 லட்சத்து 33 ஆயிரத்து 587 வாக்காளர்கள் உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

மாநில அளவிலான இறுதி வாக்காளர் பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் இன்று பிற்பகல் சென்னை தலைமை செயலகத்தில் வெளியிடவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழ்நாட்டில் வரும் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியமைப்பதற்கான ஆக்கப்பூர்வமான

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தி.மு.க. ஆட்சியில் எதிர்கட்சிகளின் கருத்துக்கள் மறைக்கப் படுவதாகவும், சட்டமன்றத்தில் எதிர்கட்சிகள் பேசுவது இருட்டடிப்பு செய்யப் படுவதாகவும் குறை கூறினார்.

தி.மு.க. பாரபட்சமான ஆட்சி நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்தியா – ஆஸ்திரேலியா மகளிர் அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நாளை தொடங்குகிறது.

இரண்டாவது போட்டி வரும் வெள்ளிக்கிழமையும், 3-வது இறுதிப் போட்டி வரும் ஒன்றாம் தேதி ஹாபர்டில் நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖